C.C.No. 81/2016

PW1 கலிபுல்லா த/பெ. கமீது 29.09.2025

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை எந்த தேதியில், எங்குவைத்து, எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்துவிட்டு சென்ற பின்னர் சம்பவ இடத்தில் வைத்து 01.01.2016 ம் தேதி என்னை விசாரித்தார்கள். நான் சொல்வதுபோல், சொன்ன இடத்தில், சொன்னதேதியில், சொன்ன நேரத்தில் என்னை விசாரிக்கவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்றால், நான் தான் எழுதினேன், அதில் உள்ள கையொழுத்து என்னுடையதுதான். புகார் எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 01.01.2016 ம் தேதியான சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தேன். எனது புகாரில் எதிரி அருவாள், கம்பிகளை காட்டி மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரில் எதிரி சமபவத்திற்கு முன்னால் இடத்தை ஆக்கிரமித்தாக சொல்லியுள்ளேன், இது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இதுசம்மந்தமாக சிவில் வழக்கு உள்ளது. அந்த சிவில் வழக்கை எதிரிதான் தொடுத்துள்ளார் என்றால் சரிதான். முகமது யாசின் எனது உறவினர் என்றால் சரிதான். சம்பவத்தின்போது அவர் திமுக நகர செயலாளராக இருந்தார் என்றால் சரிதான். ஜமாலியா முகமது எனது உறவினர் என்றால் சரிதான். சர்வே எண் 354/10 ஜாமாலியா முகமது முகின் என்பவருடையது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு வடக்கே எதிரியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீடு உள்ள சர்வே எண் 353 B ward, Block 325 என்றால் சரியல்ல. 2000 ஆண்டிலிருந்த மேற்கூறிய சர்வே எண்ணில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் எதிரி கொட்டகைக்கு போட வைத்திருந்த கடப்பாறை, அருவாள் ஆகியவற்றை காட்டி ஓடிபோய்விடு இல்லையென்றால் கொல்லாமல் விடமாட்டேன் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் கடப்பாறை என்று சொல்லவில்லை, கம்பி என்று சொல்லியுள்ளேன்.

2) எதிரி மிரட்டியதனால் எங்கள் இருசக்கர வாகனத்தை விட்டுவிட்டு இன்னொரு வாகனத்தில் வந்துவிட்டோம் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், மேற்கூறிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஜமாலியா முகமது முக்ரிம் எந்த தேதியில், எந்த நேரத்தில், எப்போது எனக்கு தகவல் கொடுத்தார் என்றால் தொலைபேசி மூலமாக பகல் 11.30, 12.00 மணியளவில் சம்பவம் நடந்த அன்று எனக்கு தகவல் கொடுத்தார். நான் உடனடியாக எனது கடையிலிருந்து சென்றேன் என்றால் சென்றேன். 22.12.2015ம் தேதியன்று மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எதிரி எங்கள் மீது அவரது இடத்தை சுற்றி கல் ஊன்றியதற்கு புகார் கொடுத்து அது சம்மந்தமாக போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல, நான் கூறுவது பொய் அவ்வாறு எதிரி புகார் கொடுத்தன்பேரில் ஜாமாலியா முகமது முக்ரீம், மற்றும் யாசினையும் போலீசார் விசாரித்தனர், அதன் பின்னர் எங்கள் அரசியல் செல்வாக்கை வைத்து எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, எதிரி பட்டியல் சமுகத்தை சேர்ந்தவர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, அவ்வாறு நடந்திருந்தால் உண்மையான புகார் கொடுத்திருப்போன் என்றால் சரியல்ல. எதிரி மேற்கூறிய புகாரை கொடுத்ததை திரும்ப பெறுவதற்காகவும், அவர் இடத்தை விற்பதற்காகவும், அவர் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.